

# தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்



தொகுப்பாசிரியர்
ப.பிரதாப்



“

காலத்திற் கேற்ற வகைகள் அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்று மில்லை

”

சுப்பிரமணிய பாரதியார்

ISBN 8193796381
9788193796382

தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்
(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)

தொகுப்பாசிரியர்
ப. பிரதாப்

உரிமை
ஆசிரியருக்கே

முதற்பதிப்பு
அக்டோபர், 2019

வெளியீடு
தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

வடிவமைப்பு, அச்சு
பாலகீதா மீடியா, பொள்ளாச்சி, 99761 44451

பக்கங்கள் : 18 + 398 = 416

விலை: ரூ. 450/-

ISBN : ISBN 819379638-1
9788193796382

# 33. சேரமன்னர்களின் காலமும் சூழலும்

முனைவர் பே.மஹேஸ்வரி
இணைப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, ந.க.ம கல்லூரி,
பொள்ளாச்சி.

பன்னெடுங்காலமாக ஆதிமக்கள் தமிழகத்தில் வாழ்ந்து வந்தனர். உலகத் தோற்றத்தில் அனைத்து உயிரினங்களை விடவும் மேலாக பண்பட்டு விளங்குவது மனித மனமே. ஏனைய உயிரினங்களைப் போலவே மனித இனமும் கூடி வாழும் தன்மை கொண்டவை. தலைமுறை தலைமுறையாய் மரபு வழியாக வளர்ந்து வந்த நல்ல பழக்க வழக்கங்கள், குணங்கள், நெறிமுறைகள் அவர்கள் வாழும் சூழலுக்குத் தக்கவாறு பண்பட்டு முன்னேற்றம் அடைந்துள்ளது. இனக்குழு சமுதாயம், சிறு ஊர்கள் என வளர்ந்து பெரிய நாடாக மாறியது என்பது வரலாறு. அந்த வகையில் **"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்தகுடி"** என்ற தமிழ் மக்களின் தொன்மைக்குச் சான்று பகர்கிறது புறப்பொருள். முதன் முதலாகத் தோன்றிய மக்களும் சேரர்களே. சங்க நூல்கள் பலவற்றில் சேரமன்னர்களின் சிறப்புக்கள் பற்றிய குறிப்புக்கள் இருந்தாலும், பதிற்றுப்பத்தில் பத்து சேர மன்னர்களைப் பற்றிப் பாடப்பட்டுள்ளது. புறநானூற்றில் சேரர் பற்றிய வரலாறு உண்டு. அவரர்களைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

**சேரர்களின் வரலாறு**

சூரியன், சந்திரன், அக்னி எனும் முச்சுடர்களின் குமாரர்களாய் உலகந்தோன்றிய காலத்தே தோன்றிய சூரிய குமரன், சந்திர குமரன், அக்கினி குமரன் என்பவர்களும் அவர்களின் மரபினரும் பிற்காலங்களில் சோழர், பாண்டியர் மற்றும் சேரர் என்றழைக்கப்பட்டனர். தமிழ் மண்டலம் என்னும் தென்னகத்தை மூன்று கூறாக்கி ஒன்றைச் சூரிய மரபினரும், மற்றொன்றைச் சந்திர மரபினரும், இன்னொன்றை அக்கினி மரபினரும் ஆண்டனர். சூரிய மரபினர் ஆண்ட பூமிக்கு சோழர்

நாடு, வேளற் மண்டலம், வேள் தேசம், நாக மண்டலம், பொன்னி மண்டலம், காவிரி நாடு, கிள்ளி மண்டலம், வளவன் மண்டலம் என பலப் பெயர்களுண்டு சந்திர மரபினர் ஆண்ட பூமிக்கு பாண்டியர் நாடு, பாண்டிய மண்டலம், வையை நாடு என பெயர்களுண்டு. அக்கினி மரபினர் ஆண்ட பூமிக்கு சேர மண்டலம், மலை நாடு, சேரன் நாடு எனப்பெயர்களுண்டு.

கி.பி.126 61ல் வாழ்ந்த தாலமி என்பார் எழுதியுள்ள குறிப்பில் சேர வேந்தர் **'கேரள போத்திராஸ்'** என்றும் அவர்களது தலைநகர் **'கரவ்ரா'** என்றும் குறிக்கப்படுகிறது. இடைக்காலக் கல்வெட்டுக்களில் கேரளரென்ற வழக்கு கி.பி. 8-ம் நூற்றாண்டு முன்பே தோன்றியிருப்பது தெரிகிறது. அதுமட்டுமல்லாமல் சேரலர் என்பது கேரளர் என மாறி வழங்கும் முறை வடநாட்டில் நெடுங்காலத்துக்கு முன்பே தோன்றிவிட்டது. அசோகன் கல்வெட்டில் காணப்படுவது கேரளமென்பதேயாயினும் 2,000 ஆண்டுகளுக்கு முன்பே வடவர் சேரலர் என்னும் தமிழ்ச் சொல்லைக் கேரளரெனத் திரித்துக் கொண்டரென்பதை அறியலாம். ஆனால் மேனாட்டுக் கிரேக்க யவனர்கள் கி.பி.3-ஆம் நூற்றாண்டு வரையிலும் சேரர்களைச் சேரர் என்றும் சேரமான்கள் என்றும் வழங்கி வந்திருக்கின்றார்கள். இச்சேர மன்னர்களுக்குச் சங்க நூல்கள் மிகப் பல சிறப்புப் பெயர்களை வழங்குகின்றன. அது குடிப்பெயரோ, இயற்பெயரோ என ஆராய்ச்சியாளர்கள் சந்தேகம் கொண்டுள்ளனர். ஏனைய சோழ பாண்டியர் வரலாறு போல இவரது வரலாறு எளிதில் கிடைக்காமல் இருந்ததற்கு இதுவும் ஒரு காரணமாகும். சேரலர், சேரல், சேரமான் என்பன பொதுப்பெயர்.

"வென்றி நல்வேல் வானவரம்பன்"

"வான வரம்பனை நீயோ பெரும!"

"தேனிமிர் நறுந்தார் வானவன்"

"பெரும்படைக் குதிரை நற்போர் வானவன்"

"வெல்போர் வானவன் கொல்லிக் குடவரை"

"வரிசையில் வெம்போர் வானவன்"

"சினமிகு தானை வானவன்"

"மாண்வினை நெடுந்தேர் வானவன்"

"வில்கெழு தடக்கை வெல்போர் வானவன்"

என பண்டைச் சான்றோர்களால் வியந்து சிறப்பிக்கப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது.

சேர நாட்டின் எல்லைகள்

அக்கினி மரபினர் ஆண்ட பூமிக்கு சேரநாடு, மலை நாடு, சேரன் நாடு என பெயர்களுண்டு. சங்க காலச் சேரர்களின் எல்லைகள் கொங்கத்தின் எல்லைகளேயாகும். ஆனால் பிற்காலத்தில் உருவாகிய கொல்லம் கேரள வர்மாக்கள் சமஸ்கிருதத்திற்குக் கேரளாவில் முக்கியத்துவம் அளித்ததால், அங்கு தமிழ் அழிந்தது. ஆகையால் அப்பகுதிகள் தன்னாட்சி பெற்றன. சங்க, பக்தி காலச் சேரர்கள் (சேரமான் பெருமாள், குலசேகரர் ஆகியோர்) கரூரினின்றே ஆட்சி புரிந்தனர். ஆனால் இவர்கள் ஆட்சி முடிந்தவுடன், கேரள வர்மாக்கள் கிளர்ச்சி மூலம் கொல்லத்தைத் தலைமையிடமாகக் கொண்டு கேரளத்தில் தனியாட்சி நிறுவினர்.

பண்டைத் தமிழகத்தில் புகழ் பெற்று விளங்கிய மூன்று நாடுகளுள் ஒன்றாகத் தமிழகத்தின் மேற்குக் கரையில் அமைந்திருந்த சேர நாட்டை ஆண்ட அரசவழியினரைச் சேர்ந்தவர்களே சேரர்கள் எனப்படுகிறார்கள். சேரர்களின் கேரள தேசம் சோழ தேசத்திற்கு மேற்கிலும், அரபிக்கடலும், தென்கடலும் கூடுமிடத்திலுள்ள கன்னியாகுமரி முதல் வடபாகமாக நீண்டு கர்னாடக தேசத்திற்குத் தெற்கிலும் அகன்று பரவி இருந்த தேசம். இங்கு பூமி கிழக்கே உயரமாகவும், மேற்கே சரிந்தும், தென்வடலாய் நீண்டும், கடல் ஓரங்களில் சரிந்தும் மேடு பள்ளமும் ஆகக் காணப்படும். வடகேரளம், தென்கேரளம் என இரு பிரிவாகவும், தென் கேரளத்திற்கு **'அனந்தபுரம்'** என்றும் வடகேரளத்திற்கு **'கொச்சி'** என்றும் பெயர் வழங்கிவருகிறது.

## சேரர் ஊரும் பெயரும்

சேரலர் என்பது கேரளர் என மாறி வழங்கும் முறை வடநாட்டில் நெடுங்காலத்துக்கு முன்பே தோன்றிவிட்டது. அசோகன் கல்வெட்டில் காணப்படுவது கேரளமென்பதேயாயின் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வடவர், சேரலர் என்னும் தமிழ்ச்சொல்லைக் கேரளர் எனத்திரித்துக் கொண்டதை அறியலாம். ஆனால், மேனாட்டுக் கிரேக்க யவனர்கள் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரையிலும் சேரர்களென்றும் சேரமான்களென்றும் வழங்கி வந்தனர்.

அக்கினி மரபினர் பெயர்கள் உதியன், குடகன், குடக்கோன், கேரளன், கொங்கன், சேரலன், சேரலாதன், மலையமான், முத்தரையன், வஞ்சிவேந்தன், வானவரம்பன், வானவன், வில்லவன், புலியன், பனந்தாரகன், பொறையன், கொல்லிவெற்பன், குட்டுவன் என்பன. மேலும், குடக்கோ, பொறையன், இரும்பொறை, கடுங்கோ, கோதை, சேரல், சேரலர், சேரமான் என்ற சிறப்புப் பெயர் கொண்டு அழைப்பதுண்டு.

மூவேந்தர்களில் ஒருவரான இவர்கள் கரூரையும், வஞ்சியையும் தலை நகராகக் கொண்டிருந்தனர். சில சேர அரசர்கள் தொண்டியையும் தலைநகராகக் கொண்டு ஆண்டனர். திருவாங்கூர் அரசுக்குட்பட்ட பகுதி குட்டநாடு. இந்நாட்டுக்கும் வஞ்சியே தலைநகரமாக இருந்தது. கடற்கரையையொட்டித் தொடர்ந்து விளங்கும் காயற்குட்டத்தின் கீழ்க்கரையில் இந்நகரம் இருந்தது. இக்குட்டம் கொச்சி, கொடுங்கோர், சர்த்துவாய் என்ற மூன்று இடங்களில் கடலொடு கலந்து கொள்கிறது. கொடுங்கோரென்பது வஞ்சி நகர்க்கு இடைக்காலத்து உண்டாகி வழங்கி வந்த பெயர். மலைநாட்டுக் கொடுங்கோர் என்று கல்வெட்டு கூறுகிறது. அதன் ஒரு பகுதியான வஞ்சிக்களம். அஞ்சைக்களம் என்றும் வஞ்சிக்களம் என்றும் வழங்குவதாயிற்று.

இதனால் வஞ்சிநகர் கடற்கரைத் துறைமுகமாகவும் விளங்கியது. வஞ்சி முற்றத்தேயிருக்கும் காயல் கடலொடு கூடும கூடல்வாயின் தென்கரையில் முசிறியும், வடகரையில் ஆறு

ஏழுகல் தொலைவில் கருவூரும் இருந்தன. கருவூர் இப்போது கருவூர்ப்பட்டினமென வழங்குகிறது. இவற்றின் இடையே காயலின் கீழ்ப்பகுதியில் பேரியாற்றின் கிளைகளுள் ஒன்றான சுள்ளியாறு வந்து கலக்குகிறது. தென்மெற்கில் முசிறி நகரும் வடமேற்கில் கருவுரும் தன்கண் அடங்க இடையிற்கிடந்த காயற்குட்டபுடன் விளங்கியமை அறியப்படுகிறது. இதுபற்றியே சான்றோர் ஏனை உறையுர் மதுரை என்ற நகர்களோடு ஒப்பவைத்து இவ்வஞ்சி நகரைச் சிறப்பித்து, **"...வளங்கெழு முசிறி"** என்று போற்றியுள்ளனர். முற்கால சோழர்கள் சங்ககாலத்தில் பிற்காலச் சேரர்கள் என மூன்று பிரிவுகளாக வாழ்ந்து வந்துள்ளனர்.

**கடைச்சங்க காலச் சேரர்கள்.**

1. உதியஞ்சேரலாதன். கி.பி. 45-70.
2. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். கி.பி. 71-129 (-59 ஆண்டுகள்)
3. பல்யானைச் செல்கெழுகுட்டுவன். கி.பி. 80-105 (-25 ஆண்டுகள்)
4. களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல். கி.பி. 106-130 (-59 ஆண்டுகள்)
5. செங்குட்டுவன். கி.பி. 129-184 (55 ஆண்டுகள்)
6. அந்துவஞ்சேரல் இரும்பொறை. (காலம் தெரியவில்லை)
7. செல்வக்கடுங்கோவாழியாதன் இரும்பொறை. கி.பி.123-148 (-25 ஆண்டுகள்)
8. ஆடுகோட்பாட்டுச் சேரலாதன். கி.பி. 130-167(38 ஆண்டுகள்)
9. தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை கி.பி. 148-165 (-17ஆண்டுகள்)
10. இளஞ்சேரல் இரும்பொறை. கி.பி. 165-180.(-16 ஆண்டுகள்)
11. குட்டுவன் கோதை. கி.பி. 184-194.
12. மாரிவெண்கோ. காலம் தெரியவில்லை.

13. சேரமான் வஞ்சன். காலம் தெரியவில்லை.

14. மருதம் பாடிய இளங்கடுங்கோ. காலம் தெரியவில்லை.

15. சேரமான் கணைக்கால் இரும்பொறை. காலம் தெரியவில்லை.

16. சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை. காலம் தெரியவில்லை.

இவ்வாறாக ஒரு சில சேர அரசர்களின் ஆட்சிக்காலங்கள் ஒருவாறு கணிக்கப்பட்டுள்ளன.